முதன்மை சார்பு நீதிமன்றம் மற்றும் முதன்மை உதவி அமர்வு நீதிமன்றம், விழுப்புரம்

E.P.148-2012 in Laop.No.92/1996

இன்று( 09/01/2023 ) 1872 ம் ஆண்டு இந்திய சாட்சிய சட்டம் (1)ன் படி திரு.S. விஜயகுமார், M.A.,M.L., முதன்மை சார்பு நீதிபதி மற்றும் முதன்மை உதவி அமர்வு நீதிபதி அவர்களால் பிரமாணம் செய்யப்பட்டு உறுதியளிக்கப்படுகிறது.

சாட்சி PW 1

| | | | |
|---|---|---|---|
| பெயர் | R. ஜெயபாலன் | மதம் | |
| த/பெ | ராமானுஜம் | தொழில் | |
| ஊர் | கீழ்பெரும்பாக்கம் விழுப்புரம் | | |
| மாவட்டம் | | வயது | 67 |

முதல் விசாரணை

நான் எழுத்து பூர்வமான முதல் விசாரணை சாட்சி பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்கின்றேன். அதிலுள்ள விவரங்கள் பற்றி எனக்கு தெரியும். நான் கூறித்தான் பிரமாண வாக்குமூலத்தில் உள்ள விவரங்கள் தயார் செய்யப்பட்டது. பிரமாண வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். நான் எனது கணக்கீட்டு குறிப்பாணையை புதியதாக இன்று தாக்கல் செய்கிறேன். எனது தரப்பில் கீழ்கண்ட ஆவணங்கள் குறியீடு செய்யப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| 1 | 09/01/2023 | எனது கணக்கீட்டு குறிப்பாணை அசல் | மசாஆ.1 |

குறுக்கு விசாரணை

முதல் தவணையாக ரூ.141642/- வழங்கப்பட்டது என்றால் சரிதான். அதில் ரூ.16000/- வருமானம் வரி பிடித்தம் செய்யப்பட்டது என்றால் எனக்கு தெரியாது. எந்தவொரு தொகையை அரசிடமிருந்தோ வேறு நிறுவனத்திடமிருந்தோ பெறப்படும்பொழுது வருமானம் வரி பிடித்தம் செய்யப்படுகிறது என்றால் எனக்கு அதுபற்றி தெரியாது. அதன் பிறகு உயர் நீதிமன்றத்தில் அப்பீல் செய்து எ.எஸ்.நெ.853/ 2009 ல் 23/12/2009 அன்று கொடுக்கப்பட்ட தீர்ப்பின் படி நில எடுப்பிற்கான தொகை ஒரு சதுரடிக்கான ரூ.17/- ஆக உயர்த்தி வழங்கப்பட்டது என்றால் சரிதான். அந்த தீர்ப்பின் படி நான் ரூ.86299/- பணம் வாங்கினேன் என்றால் நான் ரூ.77000/-பணம் மட்டும் தான் வாங்கினேன். அந்த வித்தியாசத்தொகை வருமான வரி பிடித்தம் செய்யப்பட்டது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. நான் உயர்நீதிமன்ற தீர்ப்பு படி

**தான் கணக்கீட்டு குறிப்பாணை தாக்கல் செய்துள்ளேன். எனக்கு எந்த தொகையும் அதிகப்படியாக வழங்க கூடியதில்லை என்றால் அது சரியல்ல. எனக்கு உயர் நீதிமன்ற தீர்ப்பு படி பணம் வழங்கப்படவில்லை.**

**மறுவிசாரணை - இல்லை.**

**x**

**திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொன்னதை என்னால் தட்டச்சருக்கு கூறப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னிலையில் கையொப்பம் இடப்பட்டது.**

**ஒப்பம்/எஸ்.விஜயகுமார்**
**முதன்மை சார்பு நீதிபதி மற்றும் முதன்மை உதவி அமர்வு நீதிபதி, விழுப்புரம்**